தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2025

**8 வயதுப்பிரிவு**
(01.01.2017 – 31.12.2017 வரையில் பிறந்தோர்)

## அறம் வெல்லும்

அறம்! தமிழர் வாழ்வின் அடிப்படை. எமது சிந்தனையும் செயலும் அறத்தின் வழிப்பட்டது. ‘அறம் வெல்லும்’ என்பதே எம் அசைக்க முடியாத நம்பிக்கை.

அதனாலேயே பேரழிவைச் சந்தித்து நின்ற போதும் அறம் காத்தவர் எங்கள் தலைவர் மாமா. அவர் காட்டிய அறவழியில் விடுதலைப் போரை நடத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகள்.

அளப்பெரிய ஈகங்கள் நிறைந்த எம் விடுதலைப் போராட்டம் அறம் தழுவியது. பல்லாயிரம் மாவீரர்களையும் மக்களையும் விலையாகக் கொடுத்தது. தமிழீழ நிகழ் அரசு அறம் பேணிச் செயற்பட்டது.

சிங்கள ஆட்சியாளர் அறம் தவறித் தமிழின அழிப்பினை முன்னெடுத்தனர். எமது உரிமைகளைப் பறித்தனர். ஆனாலும், அறத்தின் வழியில் நாம் தொடர்ந்து போராடுகிறோம்.

இழந்த எம் மண்ணை மீட்பதற்கான பயணம் தன் இலக்கை அடையும். தமிழீழம் மலரும். மாவீரர் கனவு நனவாகும். அறம் வெல்லும்.

நன்றி,

வணக்கம்.